மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : தலைவர் அவர்களே, அதைப்பற்றிய விபரக் குறிப்புகள் என்னிடத்திலே இல்லை.

மின்னல் வேகப் பேருந்துகள்

*339. வினு—திரு. என். கிட்டப்பா : திரு. சு. துரைசாமி : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா ?

1972–73-ம் நிதி ஆண்டில் சென்னையிலிருந்து எந்தெந்த வழித்தடங்களில் மின்னல் வேகப் பேருந்துகளை விடுவதற்கு அரசு ஆலோசித்துள்ளது?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : 1972–73-ம் நிதி ஆண்டில் சென்னையிலிருந்து புதிய வழித்தடங்களில் மின்னல் வேகப் பேருந்துகளை விடும் செயற்குறிப்பு எதுவும் தற்போது இல்லை. பழைய வழித்தடங்களில் அவை ஓடுகின்றன.

திரு நா. வீராசாமி : தலைவர் அவர்களே, பழைய வழித்தடங்களிலே] அவை ஓடுகின்றன என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அவற்றை விட வேகமாக–பிருந்தாவனம் எக்ஸ்பிரஸ் போன்று–இருநூறு, முந்நூறு மைல்கள் தூரமுள்ள இடங்களுக்கு மின்னல் வேக பஸ்களை விட்டு 100 மைல்களுக்கு ஒரு முறை உள்ள இடங்களில் நிற்பதற்கு வசதி செய்து அதனுடைய வேகத்தை அதிகப்படுத்துவதற்கு ஏற்ற முறையிலே மின்னல் வேக பேருந்துகளை விட அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, மின்னல் வேகப் பேருந்துகளைப் பொறுத்த அளவிற்கு 100 மைல்களுக்கு ஒரு இடத்திலே நிறுத்தப்படுகிறது. சென்னையிலிருந்து புறப்பட்டால் விழுப்புரத்திலேயும், திருச்சியிலேயும், மதுரையிலேயும் நிறுத்தப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பிருந்தாவனம் எக்ஸ்பிரஸ் போன்று அதனுடைய வேகத்தை அதிகப்படுத்த வேண்டுமென்று சொன்னார்கள். பிருந்தாவனம் எக்ஸ்பிரஸ் தண்டவாளத்தில் ஓடுகிறது. ஆனால் மின்னல் வேகப் பேருந்துகள் தார் ரோட்டிலே ஓடுகின்றன. பல வண்டிகள் மட்டுமல்ல, பல வாகனங்கள், பல உயிரினங்கள் வருகின்றன வென்பதை மறந்துவிடக் கூடாது.

திரு க. உரொ. எட்மண்ட் : இந்த மின்னல் வேக வண்டிகளை விட்டதற்காக மாண்புமிகு அமைச்சர் அவர்களைப் பாராட்டுகிறேன். ஆனால் 450 மைல் தூரம் உள்ள ஊர்களுக்கு இந்த வண்டிகள் செல்லும் பொழுது 50 பேர்கள் செல்வது என்பது சங்கடமாக இருக்கும். மேலும் அந்த மின்னல் வேக வண்டிகள் எல்லாம் இரவு நேரங்களிலேதான் ஓடுகின்றன. எனவே பயணிகள் எல்லாம் இரவு நேரத்திலே கொஞ்சம் தூங்குவதற்கு வசதி செய்யக்கூடிய முறையிலே ஆசனங்களை சீர்திருத்தம் செய்ய அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா?

1973 மார்ச் 13]

மாண்புமிகு திரு ச. இராமச்சந்திரன் : மின்னல் வேக வண்டிகளைப் பொறுத்தவரையில் நல்ல வசதிகள் செய்யப்பட்ட இருக்கைகள் பொருத்தப் பட வேண்டும் என்பதுதான் அரசாங்கத்தின் கொள்கை. படிப்படியாக அந்தக் காரியங்கள் நிறைவேற்றப்படுகின்றன.

திரு எண். கணபதி : தலைவர் அவர்களே, நம்முடைய மின்னல் வேக வண்டிகள் தரையிலேதான் ஓடுகின்றன. தரையிலேயும் இல்லாமல், தண்டவாளத்திலேயும் இல்லாமல் ஆகாயத்தில் விடுகின்ற முறையில் ஏர் பஸ்களை விடுவதற்கு அரசாங்கம் ஏதாவது திட்டம் வைத்திருக்கிறதா?

மாண்புமிகு திரு ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, நல்ல வேளையாக தண்ணீரிலே ஓடுகின்ற பஸ்களைப்பற்றிக் கேட்காது இருந்தாரே அதற்காக நன்றி.

திரு கே. எஸ். குப்பல் இராமகிருஷ்ணன் : மின்னல் வேக பஸ்கள் குறித்த இடத்திற்கு குறித்த நேரத்திலே போய்ச்சேரவேண்டுமானால் அந்த வண்டிகளை ஓட்டுபவர்களுக்கு நல்ல வசதிகள் இருக்க வேண்டும். வண்டி களிலே லைட்டுகள் போதுமான அளவிற்கு வெளிச்சமாக எரியாததால் வேகமாக ஓட்ட முடியவில்லை யென்று சொல்கிறார்கள். அதைத்தவிர சில இடங்களிலே வைப்பரேட்டர் வேலை சரியாக செய்யவில்லை. எனவே இந்த நிலைமைகளை மாற்றி அந்த வண்டிகளை ஓட்டுவதற்கு அரசாங்கம் நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ளுமா ?

மாண்புமிகு திரு ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, அத்தகைய குறைகள் ஏதேனும் இருக்குமானால் அவற்றை அரசாங்கத்தின் போக்குவரத்துதுறை பரிசீலித்து ஆவன செய்யும் என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

திரு கா. வேழவேந்தன் : தலைவர் அவர்களே, நிறைந்த வரு மானத்தை ஈட்டித் தருகின்ற திருப்பதிக்குப் போகின்ற வண்டிகளை, மின்னல் வேக வண்டிகளை ஆந்திர மாநிலம் தான் ஓட்டிக் கொண்டிருக் கிறது. மின்னல் வேக வண்டிகளை ஊத்துக்கோட்டை, பெரிய பாளையம் வழியாக திருப்பதிக்கு விட்டு நிறைந்த வருமானத்தை ஈட்டுவதற்கு அரசாங்கம் முயற்சி செய்யுமா?

மாண்புமிகு திரு ச. இராமச்சந்திரன் : திருப்பதிக்குப் போக வேண்டிய பேருந்துகள், ஊத்துக்கோட்டை, பெரியபாளையம் வழியாகப் போனால் மின்னல் வேக பஸ்களாக எப்படியிருக்கும் என்று தெரியவில்லை. ஆந்திர மாநிலம்தான் அந்தப் பகுதிக்கு பஸ்களை விடுகிறார்கள், நாம் விடவில்லை என்று சொல்கிறார்கள். அது சரியல்ல. அவர்கள் 6 வண்டிகளை விடு கிறார்கள், நாம் 6 வண்டிகளை விடுகிறோம். எனவே சரியான முறையில் தான் ஒப்பந்தம் செய்து கொண்டு பேருந்துகளை விட்டு வருகிறோம்.

திரு நா. வெ. குருசாமி : தலைவர் அவர்களே, சென்னையிலிருந்து மதுரைக்கு மின்னல் வேக வண்டிகள் 9 மணி நேரத்தில் ஏற்கெனவே

போய்க் கொண்டிருந்த நிலைமையை மாற்றி, 10 மணி நேரத்திலே செல்கிறது. அதை 9 மணி நேரமாக ஆக்குவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, சென்னையிலே இருந்து திருச்சி செல்வதற்கு $6\frac{1}{2}$ மணி நேரம் ஆகிறது. ஆகையினாலே மதுரைக்கு $9\frac{1}{2}$ மணி நேரம் ஆக்கியிருப்பார்கள் என்று நினைக்கிறேன். இருந்தாலும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய யோசனையையும் அரசாங்கம் கவனத்தில் கொள்ளும்.

அரசுப்போக்குவரத்துத்துறை பணி மனைகளில் சோதனைக் கூடங்கள்.

* 340. வினு—திரு எம். ஏ. லத்தீப் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா?

அரசுப் போக்குவரத்துத்துறை பணிமனைகளில் "ஓட்டுனர்" டெஸ்டிங் கிளினிக்குகளை அரசு ஏற்படுத்துயுள்ளதா?

மாண்புமிகு திரு ச. இராமச்சந்திரன் : இல்லை.

THIRU M. A. LATHEEF : In view of the large scale accidents that are reported now, is it not essential that such testing clinics are provided in the Government workshops, so that the drivers may be properly examined and such recurring accidents may be prevented ?

THE HON. THIRU S. RAMACHANDRAN : The Government is already seized of this matter and we would like to have a separate training institution for the drivers wherein the drivers can not only be trained, but also tested with a vision test, a reaction time test and medical test to enable them to minimise the number of accidents.

திரு எம். தேவராசன் : தலைவர் அவர்களே, பஸ்களிலே அடிக்கடி விபத்துக்கள் ஏற்படுவதைத் தடுக்க ஜப்பான் நாட்டிலே டிரைவர் சீட்டுக்கு முன்னுல் அவர்களுடைய குடும்பத்தாருடைய படத்தை வைத்திருக்கிருர்கள். அந்த முறையை நாமும் கையாண்டால் அவர்களுடைய மனைவி மக்களின் படத்தைப் பார்க்கிறபோது நல்ல முறையிலே விபத்துக்கள் இல்லாமல் ஓட்டுவதற்கு வசதியாக இருக்கும் அல்லவா? அந்த முறையைக் கொண்டுவர அரசாங்கம் முன்வருமா?

மாண்புமிகு திரு ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, ஜப்பான் நாட்டிலே டிரைவர்கள் எல்லாம் தொழில் நுட்ப வல்லுநர்களாக எஞ்சினியர்களாக இருக்கிருர்கள். ஆனல் நம்முடைய நாட்டிலே எழுதப் படிக்கத் தெரிந்தாலே போதும் என்ற தகுதியை வைத்திருக்கிரும். ஆகவே டிரைவர்களுக்கு நல்ல முறையிலே பயிற்சி அளித்து விபத்துக்களைத் தடுக்க முடியும் என்று கருதுகிறேன். குடும்பத்தாருடைய படத்தை